பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 04 | செவ்வாய்க்கிழமை | 21.11.2023 | அதிர்வு 112

## இளைஞரைக் கொலைசெய்த பொலிஸாரைக் கைது செய்க!

### முன்னணி வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இளைஞரைக் கொடூரமாகத் தாக்கிக் கொலை செய்த பொலிஸார் அனைவரும் உடனடியாகக் கைது 06

# மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

## வீரமறவர்களின் பெயர்ப்பட்டியல் யாழ்ப்பாணத்தில் திரை நீக்கம்

(எஸ்.நிதர்ஷன்)

மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரைத் தியாகம் செய்த போராளிகளை நினைவுகூரும் மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதையொட்டி யாழ்ப்பாணம், நல்லூரிலுள்ள 02




# ராஜபக்ஷக்கள் சூறையாடிய நிதியை மீளப் பிடுங்குங்கள்!



## உயர்நீதிமன்றத் தீர்ப்பைச் சரியான முறையில் செயல்படுத்த வற்புறுத்துகின்றார் சந்திரிகா

**இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்படக் காரணமானோரைச் சுட்டிக்காட்டி உயர்நீதிமன்றம்அண்மையில்வழங்கியதீர்ப்பைமுன்னாள்ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பாராட்டியுள்ளார்.** 06

### நினைவேந்தலுவுக்கு

## தடை கோரிய மனு தள்ளுபடி

(ந.லோகதயாளன்)

தெல்லிப்பளை மற்றும் அச்சுவேலிப் பொலிஸாரால் மாவீரர் வார நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை கோரிமல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இரு பொலிஸ் நிலையங்களின் பொலிஸாரால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருந்த 06

## பொலிஸுக்கு எதிராக அங்கஜன் எம்.பியும் கண்டனக் குரல்

(எஸ்.நிதர்ஷன்)

மனித உரிமைகளை மதிக்காது மிருகத்தனமாகச் செயற்பட்ட யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொலிஸார் உடனடியாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்று ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற 06

## சீனிக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கம்

அத்தியாவசியப் பொருள்களில் அடங்கும் சீனிக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டுள்ளது.

வரி விதிப்பதற்கு முன்பாக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட சீனியை அரசு கொள்வனவு செய்து, சதொச ஊடாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. 06

## வரவு – செலவுத் திட்டத்தை எதிர்க்க தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்மானம்

### வாக்களிப்பில் பங்கேற்காமல் இருக்க விக்கி முடிவு

(ந.லோகதயாளன்)

வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கட்சிகள் எதிராக வாக்களிக்கத் தீர்மானித்துள்ளன என்று அறியமுடிகின்றது.

2024ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 13ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். மறுநாள் 14ஆம் திகதி தொடக்கம் இரண்டாம் வாசிப்பு விவாதம் இடம்பெற்று வருகின்ற 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த தேசிய மாநாட்டை நான்கரை வருடங்கள் தாமதித்து வரும் ஜனவரி 28ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

எனினும் அது மேலும் ஓரிரு வாரங்கள் தாமதமாகும் என்று இப்போது தெரிகின்றது.

இந்த மாநாட்டுக்கு முந்திய – கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவை – ஜனவரி 21 ஆம் திகதியும் – 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# பொருள்களின் விலைகள் அதிகரித்து மக்களின் வாழ்க்கைச் செலவு கூடும்

## பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் கணிப்பு



"நாட்டில் அடுத்த வருடம் புதிய வரிக் கொள்கைகள் அமுல்படுத்தப் படவுள்ளன. இதன் காரணமாக அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரித்து மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும்."

– இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த சமயமே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில் –

"ஜனாதிபதியினால் முன்வைக்கப் பட்டுள்ள பட்ஜெட் நாட்டுக்கு பொருத்தமானதா அல்லது தற்போது இருக்கும் நெருக்கடிகளை மேலும் உக்கிரமடைய செய்யும் ஒன்றா என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும்.

அடுத்த வருடம் மேலும் புதிய வரிக் கொள்கைகள் அமுல்படுத்தப்படவுள்ளன. வற் வரி 60 வீதத்தால் அதிகரிக் கப்படவுள்ளது. இந்த வற் வரி நாட்டு மக்களிடமிருந்தே அறவிடப்பட இருக்கிறது.

இதன் காரணமாக அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரித்து, மக்களின் வாழ்க்கை செலவு அதிகரிக்கும். உழைக்கும் மக்கள் பாதிக்கப் பட போகிறார்கள்.

இதேவேளை, கடந்த 8 மாதங்களுக்குள் மின் கட்டணம் செலுத்தாத சுமார் 7 இலட்சத்து 80 ஆயிரத்து 835 குடும்பங்களின் மின்சார விநியோகம் துண்டிக் கப்பட்டுள்ளது. இதுவே நாட்டின் தற்போதைய நிலைமை.

எனவே, நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு வானத்தை தொடும் அளவுக்கு உள்ள நிலையில் இந்த வரவு – செலவுத் திட்டம் மீண்டும் அவர்களை நெருக்கடிக்குள் தள்ளும் என்பதை உணர்ந்து நாடாளுமன்றத்தில் நாம் வரவு – செலவுத் திட்டதுக்கு ஆதரவளிக்க வேண்டுமா என்பதை யோசிக்க வேண்டும்.

பணமில்லை எனக் கூறி நாட்டின் வளங்களை விற்பனை செய்கிறார்கள். நாட்டின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது. அதிக வரியை அறிவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு கடன்களை பெற்றுக் கொள்கிறார்கள். இருக்கும் கடனை செலுத்தாமல் மேலும் மேலும் கடன்களை பெற்றுக்கொள்கிறார்கள். இந்த வரவு – செலவுத்திட்ட முன்மொழிவுகள் வெறும் கற்பனைக் கனவுகள். இவை நடைமுறைக்கு பொருந்தா.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை பொதுஜன பெரமுனவிடமே இருக்கிறது. வரவு – செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதா அல்லது தோற்கடிக்கச் செய்வதா என்பது அவர்களின் கைகளிலேயே உள்ளது. நாட்டின் பொருளாதாரம், நாட்டு மக்களின் எதிர்காலம் பெரமுன எடுக்க போகும் தீர்மானத்திலேயே தங்கியுள்ளது."– என்றார்.

# மலையக அரசியல்வாதிகள் விமர்சனங்களை விடுத்து மலையகத்தை அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும்

## ராமேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



மலையக அரசியல் கட்சிகள் குறை கூறுவதையும் விமர்சிப்பதையும் விட்டு, ஜனாதிபதியுடன் இணைந்து மலையக பிரதேசங்களை அபிவிருத்திசெய்ய முன்வர வேண்டும். அததுடன், மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணி வழங்குவதற்காக 400 கோடி ரூபா ஒதுக்கியமைக்கு நன்றி தெரிவிக்கிறோம்."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு – செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

"மலையக மக்கள் இந்தியாவில் இருந்து வந்து 200 வருடங்கள் ஆகியும் அவர்களுக்கு காணி, வீட்டு உரிமை இல்லை. என்றாலும் மலையகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை அவ்வப்போது ஆட்சிக்கு வரும் அரசாங்கத்துடன் இணைந்து எமது கட்சி தலைவர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர்.

தற்போது ஜனாதிபதி மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார். அதற்காக 4 பில்லியன் ரூபா ஒதுக்கி இருக்கிறார். இதற்காக எமது நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன், நாம் மலையகம் என நிகழ்வை கொழும்பில் நடத்தினோம். அதில் கலந்துகொண்ட வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் தலைவர்கள் மலையக மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர்.

ஆனால், இந்த நிகழ்வையும் சிலர் விமர்சித்து வருகின்றனர். ஆனால் அமைச்சர் ஜீவன் தொண்டமான் அந்த நிகழ்வுக்கு ஜனாதிபதியை அழைத்து, மலையக மக்களுக்கு 10பேர்ச் காணி உறுதிமொழியை வழங்கவேண்டு என கேட்டுக்கொண்டிருந்தார். அவ்வாறே ஜனாதிபதியும் அந்த உறுதியை அந்த நிகழ்வில் வழங்கினார். தற்போது அதற்காக நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று இம்முறை வரவு – செலவு திட்டத்தில் மலையக அபிவிருத்திக்காக கடந்த முறைகளைவிட அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இதனையும் சிலர் விமர்சனம் செய்கின்றனர். இவ்வாறு விமர்சனம் செய்தே மலையக மக்களின் எதிர்காலத்தை இல்லாமலாக்க சிலர் இருக்கின்றனர். எம்மை பொறுத்தவரை ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்துடன் கலந்துரையாடி மலையக மக்களுக்கு என்ன தேவையோ அதனையே நாங்கள் செய்து வந்திருக்கிறோம்.

ஆனால், தொண்டமான்கள் பல வருடங்கள் மலையகத்தை ஆடசி செய்துள்ள போதும் மலையக மக்களுக்கு எந்தவித காணி உரிமையையும் பெற்றுக் கொடுக்கவில்லை. நானே மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணி உரிமையை பெற்றுக் கொடுத்தார் என ஒருவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

உண்மையில் அரச காணியை வாங்கி தனியாருக்கு கொடுத்து, தனியார் நிறுவனம் மலையக மக்களை அங்கே நுழையவிடாததால், குறித்த தனியார் நிறுவனத்துடன் கலந்துரையாடியே 8 பேர்ச் காணி பெற்றுக்கொடுக்கப்பட்டது, மாறாக மலையகத்தில் எங்கேயும் 10பேர்ச் காணி கொடுக்கப்படவில்லை. ஆனால் இப்போதுதான் மலையத்தில் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி 10பேர்ச் காணி வழங்குவதாக உறுதி வழங்கி இருக்கிறார்.

அத்துடன், மலையக மக்களுக்கு ஒரு இலட்சத்தி 70ஆயிரத்துக்கும் அதிக வீடுகள் தேவையாக இருக்கிறன்றன. அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் 1000 வீடுகளே நிர்மாணிக்கின்றது.

அதன் பிரகாரம் மலையகத்துக்கு தேவையான வீடுகளை பெற்றுக்கொள்ள பல வருட காலம் செல்லும். அதனால் 10 பேச் காணி உரிமையை பெற்றுக்கொள்வதன் மூலம் அந்த மக்களுக்கு அவர்களுக்கே வீடுகளை கட்டிக்கொள்ள முடியுமாகிறது. அதேபோன்று கல்வி அபிருத்திக்கு தேவையான நிதியையும் ஜனாதிபதி ஒதுக்கி இருக்கிறார் என்றார்.

## மாவீரர் வாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இன்று மாலை 6 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தாயக மண்ணின் விடியலுக்காக வித்தாகியவர்களில் கிடைக்கப் பெற முடிந்த 24 ஆயிரத்து 379 மாவீரர்களின் பெயர்களை உள்ளடக்கிய கல்லறைகளையும் சில தகவல்களையும் உள்ளடக்கிய நினைவாலயம் உருவாக்கப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# தரமற்ற மருந்து இறக்குமதி விடயம்
# சுகாதார அமைச்சில் நால்வர் கைது




தரமற்ற இமியூனோகுளோபியூலின் மருந்தை நாட்டிற்கு இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சின் விநியோகப் பிரிவைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு பிரிவினரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்தூவ தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் உதவிப் பணிப்பாளர்கள் இருவர், கணக்காளர், கையிருப்பு கட்டுப்பாட்டாளர் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் தொடர்ச்சியாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.



# வெளியாள்களை அழைத்து வருவதாயின் சபாநாயகரிடம் அனுமதி பெற வேண்டும்

நாடாளுமன்ற செயற்குழுக்களின் அமர்வுகளில் வெளிநபர்களை அழைப்பதற்கு சபாநாயகரின் அனுமதி கட்டாயமாக்கப்பட்டுள்ளது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் தற்போது இயங்கும் பல்வேறு செயற்குழு அமர்வுகளுக்காக அதன் உறுப்பினர்கள், செயற்குழு தலைவரின் முறையான அனுமதியுடன் வருகை தரும் குழு உறுப்பினர் அல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்கள், அந்த செயற்குழுக்களின் செயற்பாடுகளுக்காக அழைக்கப்படும் நிறுவன அதிகாரிகள், அதன்போது அழைக்கப்படும் நாடாளுமன்ற பணியாளர்கள் ஆகியோருக்கு மாத்திரமே சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நபர்கள் தவிர்ந்த ஏனைய நபர்கள் அல்லது வெளிநபர்களுக்கு செயற்குழு அமர்வுகள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் செயற்குழு அறைக்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது என சபாநாயகர் அறிவித்தார்.

நாடாளுமன்ற பணியாளர்களுக்கு மேலதிகமாக குழுக்களின் தலைவர்களினால் குழுவின் பணிகளில், ஒருங்கிணைப்பு மற்றும் ஆலோசனைப் பணிகளுக்காக ஏதேனும் வெளிநபர்களின் சேவையை தன்னார்வமாகவோ அல்லது வேறு ஏதேனுமொரு வகையிலோ பெற விரும்பினால், அதற்கு சபாநாயகரின் எழுத்துமூலமான முன் அனுமதியைப் பெறவேண்டும் என சபாநாயகர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் கௌரவம், அபிமானம் என்பவற்றுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சமநிலையாகவும் குழுவினால் அனுமதிக்கப்படும் விடயங்கள் தொடர்பில் மாத்திரம் ஊடக அறிக்கைகளை வெளியிடுமாறும் சபாநாயகர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் கடிதங்களைக் கையாளும் போது சம்பந்தப்பட்ட குழுக்களின் பெயர்கள் அடங்கிய உத்தியோகபூர்வ கடிதத் தலைப்புகள் சம்பந்தப்பட்ட குழுக்களினால் அனுமதிக்கப்பட்ட விடயங்களைத் தொடர்பாடல் செய்வதற்கு மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் என சபாநாயகர் குறிப்பிட்டார்.

RUHBINS HOSPITAL (PVT) LTD.
NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.

NOVEMBER 14
WORLD DIABETES DAY

DIABETES IS A SILENT KILLER

Approximately 463 M + From the World Population

Over 2 M Sri Lankans are Diabetes

Every 6 seconds One person dies due to Diabetes



Access to Diabetes Care

WELLNESS PACKAGE
- HBA1C
- Fasing/ Random Blood Sugar
- Total Cholesterol
- Creatinine & eGFR
- Blood Pressure
- BMI Assessment
- Consultation with Medical Officer
- Advice on Lifestyle Modification

Special Offer
Rs. 5,500/-
Offer valid till Dec 14th

Hotline:
+94772486642

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகொள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.

Ruhbins Hospital
No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கடைசி மத்திய குழு கூட்டம், கட்சியின் மகளிர் அணி மற்றும் இளைஞர் அணியின் விசேட மாநாடுகள் போன்றவற்றை ஜனவரி 27 ஆம் திகதியும் –

கட்சியின் தேசிய மாநாட்டை ஜனவரி 28ஆம் திகதியும் –

திருகோணமலையில் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தமை அறிந்ததுதான்.

அந்த வார இறுதி நாள்கள் (ஜனவரி 21, 27, 28 போன்றவை) கல்யாண சுப நாள்கள் என்று கூறப்படுகின்றது. கல்யாண நாள்கள் என்பதால் அத்தினங்களில் திருகோணமலையில் மண்டபங்கள் எல்லாம் முற்பதிவு செய்யப்பட்டு விட்டன.

மாநாட்டின் நிகழ்வுகளை நடத்துவதற்கும், உறுப்பினர்கள் திருகோணமலையில் தங்கிச்செல்வதற்கும் மண்டபங்கள் விடுதிகள் போன்றவை அவசியம்.

அதனால் மாநாட்டை ஓரிரு வாரங்கள் பிந்திப் போட்டு வசதியாக நடத்தினால் என்ன என்ற எண்ணம் ஏற்பாட்டாளர்கள் மனதில் ஓடுவதாகத் தெரிகின்றது.

அப்படி ஓரிரு வாரங்கள் மாநாட்டைத் தள்ளிப் போடுவதாயினும், அதற்குக் கட்சியின் மத்திய குழுவைக் கூட்டி, அதன் அங்கீகாரம் பெறும் திட்டம் இருப்பதாகவும் தெரிகிறது.

தமிழரசுக் கட்சி தொகுதிகள் ரீதியாகவும், பிரதேசங்கள் ரீதியாகவும் 44 கிளைகளைக் கொண்டுள்ளது. 45 ஆவது கிளையாக கொழும்புக் கிளை உள்ளது. இந்த 45 கிளைகளும் தலா ஐந்து பிரதிநிதிகளை பொதுக்குழுவுக்கு அனுப்ப வேண்டும். தவிரவும் தற்போதைய மத்திய குழுவில் இடம் பெற்றிருப்போரும் பொதுக்குழு அங்கத்தவர்களாகக் கருதப்படுவர். இந்த வகையில் சுமார் 300 பேர் வரை கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களாகக் கூடி, புதிய நிர்வாகிகளைத் தேர்வு செய்வர்.

ஏற்கனவே வவுனியாவில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட படி ஒவ்வொரு தொகுதிக் கிளையும் பொதுக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட தங்களின் பிரதிநிதிகள் ஐவரின் பெயர் பட்டியலையும் வரும் நவம்பர் 30–ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி வேண்டப்பட்டுள்ளன.

மாநாட்டை ஓரிரு வாரம் தள்ளிப் போடுவதற்கான முடிவை எடுப்பதற்கு மத்திய குழுவின் விசேட கூட்டம் ஒன்று மீண்டும் கூட்டப்படும் சாத்தியம் இருப்பதாகவே தெரிகின்றது.

தலைவரின் தொகுதிக் கிளை உட்பட சில தொகுதிக் கிளைகளில் இந்த ஐந்து பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் விடயத்தில் குளறுபடிகள் இருப்பதாக சில பேச்சுக்கள் அடிபடுகின்றன. சில தொகுதிக் கிளைகள் முறையாகக் கூட்டப்படவே இல்லை என்ற முறைப்பாடும் உள்ளது. இத்தகைய கிளைகள் சார்பிலான பிரதிநிதிகளைப் பொதுக்குழுவுக்கு அனுமதிப்பதா என்பதும் முடிவு செய்யப்பட வேண்டும்.

அதற்கு, இப்போது கூட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள விசேட மத்திய குழுக் கூட்டம் அவசியம் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

அப்படி என்றால் அந்த விசேட மத்திய குழு கூட்டத்திலேயே தேசிய மாநாட்டுக்கு முந்திய பொதுக்குழுவின் சூடு பிரதிபலிக்க தொடங்கிவிடலாம் என்று நம்பலாம்.

## சீனிக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ இந்தத் தகவலை தெரிவித்தார்.

## வரவு - செலவுத் திட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நிலையில் இன்று மாலை அதன் மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

இந்த வாக்கெடுப்பில் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுடன் இணைந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன எதிர்த்து வாக்களிக்கும் என எதிர்பார்க்கப்படும் அதேநேரம் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் வாக்கெடுப்பில் பங்கேற்கமாட்டார் எனத் தெரிய வருகின்றது.

## தடை கோரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மனுக்கள் கட்டளைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

இரு மனுக்களும் நேற்று மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நினைவேந்தலைத் தடை செய்ய முடியாது என்று நீதிவானால் தெரிவிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டன.

## பொலிஸுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலால் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படும் நிலையில் அது தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:–

"சித்தங்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறான பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெறுவது இதுவே முதல் தடவை அல்ல. ஆனால், இதுவே இறுதிச் சம்பவமாக இருக்க வேண்டும்.

சந்தேகநபர்களைத் தாக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை. இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கே உண்டு. ஆனால், இங்கு பொலிஸார் சந்தேகநபர்களை வலுக்கட்டாயமாகக் குற்றவாளிகளாக்கி விடுகின்றார்கள்.

சந்தேகநபர்களை மனிதராக மதிப்பதுமில்லை. மனித உரிமைகளை மதிக்கத் தெரியாத பொலிஸார் எந்தத் தருணத்திலும் பொலிஸாராக இருக்கத் தகுதியற்றவர்கள்.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் கைது செய்த இளைஞரை பொலிஸ் காவலரணில் வெளிப்படையாகக் காட்சிப்படுத்தவில்லை, இளைஞரின் குடும்பத்தாரிடம் இளைஞரை வெளிப்படுத்தவில்லை, எல்லாவற்றுக்கும் மேலாக 24 மணித்தியாலத்துக்குள் நீதிமன்றில் முற்படுத்த வேண்டிய சந்தேகநபரை நான்கு தினங்கள் பிரத்தியேக மறைவிடம் ஒன்றில் வைத்து உணவு கொடுக்காது மிருகத்தனமாகத் தாக்கியுள்ளனர்.

இளைஞரின் மரணத்துக்கு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சகல பொலிஸாரும் பொறுப்புக் கூற வேண்டும். உடனடியாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் இளைஞரின் மரணத்துடன் தொடர்புபட்ட பொலிஸார் அனைவரது பதவிகளும் பறிக்கப்பட்டு – கைது செய்யப்பட்டு பக்கச்சார்பற்ற விசாரணை இடம்பெற்று தண்டனை வழங்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் சந்தேகநபர்களை மறைத்து வைத்து தாக்கி தமது வாக்குமூலங்களைத் திணிப்பதற்கான பிரத்தியேக இடங்கள் இருப்பதனை அறியமுடிகின்றது.

மனித உரிமைகளைப் பேணும் நிறுவனங்கள் பலவும் செயற்பட்டு வரும் நிலையில் பொலிஸாரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. உயிரிழந்த இளைஞரின் குடும்பத்துக்கு நீதி கிடைக்க வேண்டிய அதேநேரம் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்." – என்றுள்ளது.

## ராஜபக்ஷக்கள் சூறையாடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நீதிமன்றம் அடையாளம் காட்டிய கும்பலினால் தவறாகக் கையாளப்பட்ட பணத்தை மீளப்பெறுவதற்கு அல்லது அவர்களின் சட்டவிரோத சொத்துக்களை கைப்பற்றி இலங்கையின் கடனைத் திருப்பிச் செலுத்த அதனைப் பயன்படுத்துவதற்கு தற்போதைய அரசு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி செயல்பட வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உட்பட அவர்களது அரசின் பல அதிகாரிகள் மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் போன்றோர்தான் இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்படப் பொறுப்பு என்று உயர்நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்திருந்தது.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு குறித்து கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா,

"பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களில் ஒரு சிலரை நீதிமன்றம் பெயரிட்டிருந்தாலும், அவர்களுடன் தொடர்புடைய பலர் குற்றம் சாட்டப்பட வேண்டியவர்கள். ஆனால், அவர்கள் நீதிமன்றத்தால் பெயரிடப்படவில்லை.

இது, நாட்டின் வருங்காலத் தலைவர்களுக்கும் ஒரு கரும் புள்ளியாகும். மேலும், எதிர்காலச் சந்ததியினர் ஒரு தேசத்தை எவ்வாறு சரியாக ஆள்வது மற்றும் நாட்டின் பிரஜைகள் சுயலாபத்துக்கு அல்லாமல் தேசத்துக்காக உழைத்து தலைவர்களாக உயர வேண்டும் என்பதை இதன் மூலம் படிப்பினையாக உணர்ந்து கொள்ள வேண்டும்." – என்றார்.

## இளைஞரைக் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செய்யப்பட்டு உரிய முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் தாக்குதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவரின் கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் சட்டவிரோத சித்திரவதைகளால் அப்பாவி இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டமை மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது.

இந்தக் கொலையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். குற்றமிழைத்த பொலிஸார் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும். விசாரணைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மேலும் பொலிஸாரின் அராஜகம் கட்டுக்கடங்காது தொடர்ந்து வருகின்றது. இத்தகைய அடாவடிகள் – அராஜகங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." – என்றுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பொறுப்போடு நினைவேந்துவோம்!

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரைத் தியாகம் செய்த உன்னத மாவீரர்களை நினைவு கூரும் மாவீரர் வாரம் இன்று தொடங்குகின்றது.

தமிழர்களின் உரிமைகளுக்கான ஆயுதப் போராட்டம் முடக்கப்பட்ட காலத்தில் இருந்தே நமது போராளிகளை நாம் நினைவேந்துவதற்குப் போராட வேண்டிய இக்கட்டு நிலைமை.

தென்னிலங்கையின் பௌத்த - சிங்கள ஆட்சிப் பீடம் தனது கொடுங்கோன்மைச் சட்டங்களை ஏவி விட்டு, இந்த நினைவேந்தல்களைத் தடுப்பதற்கு வழக்கம் போல இம்முறையும் பகீரதப் பிரயத்தனம் பண்ணி நிற்கின்றது.

எனினும், தமிழர் தேசத்தில் செயல்படும் இலங்கை நீதிமன்றங்கள் இம்முறை, இதுவரையில், இவ்விடயத்தில், இயன்றளவு நீதி, நியாயமாகவே செயல்பட்டிருக்கின்றமை வெளிப்படையானது.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கக் கோரும் பொலிஸாரின் விண்ணப்பங்களுக்கு எந்த நீதிமன்றமும் செவி சாய்க்கவே இல்லை. எல்லா நீதிமன்றங்களும் அத்தகைய விண்ணப்பங்களை நிராகரித்து விட்டன. நேற்றும் கூட, மல்லாகம் நீதிமன்றம் பொலிஸ் கோரிக்கையை நிராகரிக்கும் கட்டளையை வழங்கி உள்ளது.

இன்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் அத்தகைய கோரிக்கை மனு ஒன்றைப் பொலிஸார் சமர்ப்பிக்கத் தயாராகின்றனர் என்று ஒரு தகவல் வெளியானது.

எனினும், அடுத்து வரும் தினங்களில் தமிழர் தாயகத்தில் உள்ள பல்வேறு நீதிமன்றங்களில் இத்தகைய விண்ணப்பங்களை பல்வேறு பொலிஸ் நிலையங்களும் மாறி மாறி, சமர்ப்பித்து நீதிமன்றத் தடை உத்தரவைப் பெற முழுமூச்சுடன் முயற்சிக்கலாம் என்றும் தெரிகிறது.

அதை எதிர்கொள்வதற்காக தமிழ் சட்டத் துறையினரும் தயாராகி வருகின்றனர் என்ற தகவலும் கிட்டியுள்ளது.

'மக்களுக்கான நீதி' என்ற தமிழ் சட்டத்தரணிகளின் அணி நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் இல்லத்தில் கூடி இது குறித்து கலந்துரையாடி இருக்கின்றது என்று தெரிகிறது. பொலிஸாரின் இத்தகைய விண்ணப்பங்களை இவ்வாரம் முழுவதும் எதிர்கொண்டு, உரிய நடவடிக்கைகளை அந்தந்த நீதிமன்றங்களிலேயே விரைந்து எடுப்பதற்கு பொறுப்பாக சட்டத்தரணிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் ஒவ்வொரு சட்டத்தரணியிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தந்த நீதிமன்றங்களில் ஏனைய சட்டத்தரணிகளையும் ஒன்றிணைத்து, பொலிஸாரின் இத்தகைய தடை உத்தரவு விண்ணப்பங்களை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அவர்களே பொறுப்பு எனக் கூறப்படுகிறது.

ஆயினும், பொலிஸாரின் இந்த விண்ணப்பங்களை இதுவரை நிராகரித்த நீதிமன்றங்கள் ஒரு விடயத்தை பொலிஸாருக்கு நினைவூட்டிக் குறிப்பிடவும் தவறவில்லை.

அது - இத்தகைய நினைவேந்தல்களின் போது சட்டத்தை மீறும் சம்பவங்கள் நடந்தால் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம். அதற்குக் கட்டுப்பாடு கிடையாது என்பதுதான்.

ஆகவே, நினைவேந்தலை நினைவேந்தலாக நடத்துவதற்குக் கிடைத்த வாய்ப்பை அதிகப்பிரசங்கித்தனம் பண்ணிக் குழப்பாமல், வரும் 27ஆம் திகதி நள்ளிரவு வரை விடயங்களை செம்மையாக நடத்தி, நிறைவேற்றுவது ஏற்பாட்டாளர்களின் பொறுப்பு.

நினைவேந்தல் என்பது உணர்வு குமுறும் - கொப்பளிக்கும் - நிகழ்வு. அதில் புத்திசாலித்தனமாகவும், நிலைமைக்கு உகந்த வகையிலும், தந்திரோபாயமாகவும் முடிவு எடுத்து, சாதுரியமாக விடயங்களை முன்னெடுப்பது முக்கியம்.

நினைவேந்தலுக்கு நீதிமன்றங்கள் தடை விதிக்கவில்லை என்பதை திறந்த அங்கீகாரமாகக் கருதி, எல்லை மீறிச் செயற்பட்டு நிலைமையை எதிர்த் தரப்பு குழப்புவதற்கு நாமே இடமளித்து விடக் கூடாது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டுபண்ணும். என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவது தான்."

- வங்காரி மாதாய்
(அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)



# மூன்று ஆண்டுகளாக என்ன செய்தார்? தமிழக ஆளுநரிடம் உச்ச நீதிமன்றம் கேள்வி



ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிரான தமிழக அரசு தொடர்ந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் சரமாரியாக கேள்விகளை எழுப்பியுள்ளது.

மேலும், உச்ச நீதிமன்ற அழைப்பாணைக்கு பின்னரே தன் வசம் தேங்கிக் கிடந்த சட்டமூலங்களை ஆளுநர் ரவி திருப்பி அனுப்புகிறார் என்றால், கடந்த மூன்று ஆண்டுகளாக அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்றும் கேள்வி எழுப்பியுள்ளது.

சட்ட வரைபுகளுக்கு அனுமதியளிப்பதற்கு ஆளுநருக்கு கால நிர்ணயம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி, ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தமிழக அரசு தொடர்ந்த வழக்கும், மாநில அரசால் அனுப்பப்படும் சட்டமூலங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் ஆரீஃப் கான் காலதாமதப்படுத்துவது தொடர்பாக கேரள அரசு தொடர்ந்த வழக்கும் உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழக அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஏ.எம். சிங்வி, "தமிழக ஆளுநர் அண்மையில் திருப்பி அனுப்பிய 10 சட்டமூலங்கள் உள்பட 15 சட்டமூலங்களை கிடப்பில் போட்டுள்ளார். சட்டப்பேரவை நிறைவேற்றி அனுப்பும் சட்டமூலங்களை கிடப்பில் போடுவது கவலைக்குரியது என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்த நிலையில், அந்த மசோதாக்களை ஆளுநர் ஆர். என். ரவி திருப்பி அனுப்பி இருக்கிறார். மசோதாக்களை தேக்கிவைத்து அரசை முடக்க ஆளுநர் முயற்சிக்கிறார்" - என்றார்.

மாநில அரசு சார்பில் ஆஜரான மற்றொரு வழக்கறிஞரான பி.வில்சன், "ஆளுநர் இவ்வாறாக காலவரையின்றி சட்டமூலங்களை தேக்கிவைத்துக் கொள்ள அனுமதித்தால், மாநிலங்களில் நிர்வாகம் முடங்கிவிடும்" என்று வாதிட்டார்.

தொடர்ந்து, ஆளுநர் ரவி தரப்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் ஆர். வேங்கடரமணிக்கு நீதிபதிகள் சரமாரியாக கேள்விகளை முன்வைத்தனர். "ஆளுநர் ரவி தரப்பில் நவம்பர் 13 ஆம் திகதி அவர் மசோதாக்களை மாநில அரசுக்கு திருப்பியனுப்பிவிட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. நாங்கள் இந்த வழக்கில் எங்கள் கருத்தை முன் வைத்தது நவம்பர் 10 இல். அதன் பின்னர் மூன்றே நாட்களில் ஆளுநர் சட்டமூலங்களை திருப்பி அனுப்பி யுள்ளார்.

ஆனால், இந்த சட்டமூலங்கள் 2020 இல் இருந்தே கிடப்பில் உள்ளன. அப்படியென்றால் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பிய பின்னர் ஆளுநர் முடிவெடுத்திருக்கிறார். மூன்றாண்டுகளாக அவர் என்ன செய்து கொண்டிருந்தார்? கட்சிகள் உச்ச நீதிமன்றத்தை நாடும் வரை ஏன் ஆளுநர்கள் காத்திருக்க வேண்டும்?" என்று வினவினர்.

அதற்குப் பதிலளித்த அட்டர்னி ஜெனரல் வேங்கடரமணி, "பல்கலைக் கழகங்களுக்கு துணை வேந்தர்களை நியமிக்கும் விவகாரத்தில் ஆளுநரின் உரிமைகளைப் பறிப்பதுபோல் சட்ட மூலங்கள் இருந்ததால், அவற்றை மறு ஆய்வு செய்யவே ஆளுநர் திருப்பி அனுப்பினார்" என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிமன்றம், 2020 ஜனவரியில் இருந்தே சட்டமூலங்கள் தேங்கியுள்ளன எனச் சுட்டிக்காட்டியது. அதற்கு அட்டர்னி ஜெனரல், "ஆர். என்.ரவி 2021 நவம்பரில்தான் தமிழக ஆளுநராகப் பொறுப்பேற்றார்" என்று வாதிட்டார்.

பதிலுக்கு உச்ச நீதிமன்ற அமர்வு, "இங்கே பிரச்சினை ஒரு குறிப்பிட்ட ஆளுநர் சட்டமூலங்களை தேக்கி வைத்தார் என்பதல்ல ஏன் பொதுவாக அளுநர்கள் சட்டமூலங்களை தேக்கி வைக்கின்றனர் என்பதுதான்" என்று சுட்டிக் காட்டியது.

அப்போது, ஆளுநர் திருப்பியனுப்பிய சட்டமூலங்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து, ஆளுநரின் அடுத்தக்கட்ட நடவடிக்கைக் காத்திருப்பதாகக் கூறி வழக்கை டிசம்பர் 1 ஆம் திகதிக்கு உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்தது.

# காங்கிரஸுக்கு ஊழல் மட்டுமே முக்கியம்: ராஜஸ்தானில் பிரதமர் மோடி விமர்சனம்

"ராஜஸ்தானுக்கு தேவை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஓர் அரசு. காங்கிரஸ் கட்சிக்கு ஊழல் மற்றும் வாரிசு அரசியலைத் தவிர வேறு எதுவும் முக்கியம் இல்லை" என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்த வார இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தலை சந்திக்க உள்ள ராஜஸ்தான் மாநிலத்தின் பாலி மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் தெரிவிக்கையில், "நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கும் சட்டம் கொண்டு வரப்பட்டதில் இருந்து, காங்கிரஸ், அதன் கூட்டணி கட்சிகள் பெண்களுக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. அக்கூட்டணி கட்சித் தலைவர்கள் நமது தாய்மார்கள் மற்றும் சகோதரிகளுக்கு எதிராக கண்டிக்கத்தக்க கருத்துகளைக் கூறி வருகின்றனர்.

பிஹார் முதல்வர் நிதிஷ் குமார் சட்டப் பேரவையில் பெண்களுக்கு எதிராக அநாகரிகமான வார்த்தைகளைப் பயன் படுத்தியுள்ளார்.

ஆனால், இதுகுறித்து எந்த காங்கிரஸ் தலைவரும் எந்த ஒரு கருத்தையும் தெரிவிக்கவில்லை. ராஜஸ்தான் மக்கள் அங்கீகரித்த காங்கிரஸின் உண்மை முகம் இதுதான். அதேபோல், தலித்துகளுக்கு எதிராக அட்டூழியங்கள் நடப்பதைப் பார்க்கும் போதெல்லாம் காங்கிரஸ் தன்னுடைய கண்களை மூடிக்கொள்ளும்.

மொத்த நாடே வளர்ச்சியை நோக்கி இரவு பகலாக வேலை செய்து கொண்டிருக்கிறது. 21 ஆம் நூற்றாண்டில் நாடு வளர்ச்சியை எட்டும்போது ராஜஸ்தான் அதில் முக்கியப் பங்கு வகிக்கும். அதற்கு ராஜஸ்தானுக்கு, மாநிலத்தின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரசு தேவை.

இங்கு பா.ஜ.க. ஆட்சி ஏற்பட்டதும் பெட்ரோல், டீசல் விலை மறு ஆய்வு செய்யப்படும். இது ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்" என்று குறிப்பிட்டார்.

# காசாவில் நிலைமையை சீர்படுத்த உலக நாடுகளுக்கு சீனா அழைப்பு




காசாவில் தற்போதையை நிலைமையை உடனடியாக சீர்படுத்த வேண்டும் என்று உலக நாடுகளுக்கு சீனா அழைப்பு விடுத்துள்ளது.

ஹமாஸ் – இஸ்ரேல் போர் உக்கிரமடைந்து வரும் நிலையில், பாலஸ்தீன அதிகாரிகள், இந்தோனேசியா, எகிப்து, சவூதி அரேபியா மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் குழு இந்த வாரம் பீஜிங்குக்கு சென்றிருந்தது.

அங்கு இஸ்ரேல் – ஹமாஸ் போர் குறித்து விவாதிக்கப்பட்டது. அந்தக் குழுவிடம் பேசிய சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி,

"காசாவில் தற்போது நிலவும் நிலைமையை சரி செய்யவும், மத்திய கிழக்கில் விரைவில் அமைதியை மீட்டெடுப்பதற்கும் நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

அரபு மற்றும் முஸ்லிம் நாடுகளின் நியாயமான உரிமைகள் மற்றும் நலன்களை நாங்கள் எப்போதும் உறுதியாக பாதுகாத்து வருகிறோம். காசாவின் நிலைமை உலகெங்கிலும் உள்ள அனைத்து நாடுகளையும் பாதிக்கிறது. சர்வதேச சமூகம் விரைந்து செயல்பட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்றார்.

தற்போதைய பாலஸ்தீன – இஸ்ரேல் மோதலில் இருந்து பொதுமக்களைப் பாதுகாப்பது மற்றும் பாலஸ்தீனப் பிரச்சினையை நியாயமான முறையில் தீர்ப்பதுதான் இந்தப் பேச்சுவார்த்தையின் குறிக்கோள் எனக் கூறப்படுகிறது.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போரில் அமைதி காத்து வந்த சீனா, அண்மையில் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு தன்னை தற்காத்துக் கொள்ள இஸ்ரேலுக்கு உரிமை உள்ளது எனக் கூறியது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதல்களில் இஸ்ரேலில் ஏறத்தாழ 1,200 பேர் கொல்லப்பட்டனர். காசாவில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, மருத்துவமனைகளை ஹமாஸ் பதுங்கிடமாகவும், தாக்குதலுக்கு திட்டமிடும் இடமாகவும் பயன்படுத்துகிறது என்றும், அல் ஷிபா மருத்துவ மனைக்குக் கீழ் ஹமாஸ் சுரங்கம் இருக்கிறது என்றும் கூறிவந்த இஸ்ரேல், அதனை உறுதிப்படுத்துவதுபோல் சில ஆதாரங்களை வெளியிட்டுள்ளது.

காசா மருத்துவமனைகளில் 35 இற்கும் மேற்பட்ட சுரங்கங்களைக் கண்டுபிடித்துள்ளதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

# ஆர்ஜென்டினா ஜனாதிபதியாக ஜேவியர் மிலேய் தெரிவானார்



ஆர்ஜென்டினாவின் புதிய ஜனாதிபதியாக ஜேவியர் மிலேய் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அவர் புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜேவியர் மிலேய் 56 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜேவியர் மிலேய்க்கு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# கனடாவில் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

கனடாவில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்கு கடும் தட்டுப்பாட்டு நிலைமை தொடர்ந்து நீடித்து வருகிறது என தெரிவிக்கப்படுகின்றது. இந்த மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டு நிலை எதிர்வரும் ஆண்டு வரையில் நீடிக்கலாம் என எதிர்வுக்கூறப் பட்டுள்ளது.

அத்துடன், நாட்டின் சில பகுதிகளில் கூடுதலாக மருந்துப் பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், கனடாவில் கடந்த ஆண்டு சுமார் 70 லட்சம் கனேடியர்கள் பட்டினியுடன் போராடினர் என தெரியவந்துள்ளது. கடந்த ஆண்டில் 18 வீதமான குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பின்மையை அனுபவித்துள்ளன என கனேடிய புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் ஆய்வில் தெரியவந்துள்ளது.






# வட்டுவாகல் பாலத்தின் ஊடான பயணம் ஆபத்தான நிலையில்

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு நகரத்திற்கான பிரதான பாதைகளில் ஒன்றாக காணப்படுகின்ற ஏ-35 தர வீதியின் வட்டுவாகல் பாலம் எந்தவித புனரமைப்புக்களுமின்றி மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது.

இப்பாலத்தில் அடிக்கடி உடைவுகள் ஏற்படும்போது அவை தற்காலிகப் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றனவே தவிர நிரந்தரப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது பாலத்தின் மையப்பகுதியில் பாரிய உடைவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் பெரிய குழியும் காணப்படுகின்றது.

வட்டுவாகல் பாலத்தில் பல்வேறு இடங்களிலும் வெடிப்புக்கள் காணப்படுகின்றன. வீதி பாதுகாப்பற்றதாகவும் வீதியில் சில இடங்களில் தாழிறங்கியும் காணப்படுகிறது.



பலதடவைகள் சமபந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்து கூறியும் புனரமைப்பு பணிகள் எவையும் நடைபெறவில்லை.

தற்போது மழையுடன் கூடிய காலமாகையால் நீர்மட்டம் உயர்ந்து நீரோட்டம் பாலத்தை மேவிச் செல்கின்றது. கனரக வாகனங்களும் இதன் ஊடாக செல்லும் போது மேலும் உடைவு ஏற்பட வாய்ப்புள்ளது. இந்தப் பகுதியில் விபத்துகள் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கின்றன.

மழை காலங்களில் இந்தப் பாலம் இவ்வாறான நிலைமைக்கு செல்வதோடு ஆபத்தான முறையில் பிரயாணிகள் பயணம் செய்யவேண்டிய நிலையும் காணப்படுகிறது.

பாலத்தைச் சீரமைத்துத் தரும்படி அப்பாலத்தினூடாகப் பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் கோருகின்றனர்.



# பதின்ம வயது தாய்மார்கள் இலங்கையில் 2,087 பேர்

குடும்ப சுகாதார பணியகத்தின் அறிக்கையின்படி 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் சுமார் 2,087 பதின்ம வயது தாய்மார்கள் பதிவாகியுள்ளனர் என இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமாரவின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த தாய்மார்கள், குடும்ப அமைப்பு சரிவு, பாலியல் கல்வி இல்லாமை, பெற்றோர்களிடையே போதைப்பொருள் பழக்கம், பெற்றோர் இருவரும் வேலையில் இருப்பது மற்றும் குழந்தைகளிடையே ஸ்மார்ட்போன்களின் பயன்பாடு அதிகரிப்பு போன்ற பல காரணிகள் பதின்ம வயது தாய்மார்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வழிவகுத்தன எனவும் என்று அவர் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

மேலும், இலங்கையில் 124,482 குழந்தைகளை உள்ளடக்கிய 89,164 ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள் உள்ளன.

இதனால், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் சட்ட உதவிகளை வழங்குதல் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும் குமாரசிங்க தெரிவித்தார்.



# நானு ஓயாவில் வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்தது!

(மஸ்கெலியா நிருபர்)

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நானு ஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 476/ஏ கிறிமிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் டெஸ் போட், கிறிமிட்டிய, ஹார்லிபேக் போன்ற பிரிவுகளில் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் பெய்த கடும் மழையால் நான்காவது முறையாகவும் நானு ஓயா டெஸ் போட் பகுதியில் இருந்து செல்லும் கிளை ஆறுகள் பெறுக்கெடுத்ததன் காரணமாக 4 வீடுகளில் வெள்ள நீர் புகுந்துள்ளது.

இதன் காரணமாக வீட்டுப் பொருள்கள், உணவு பொருட்கள், ஆவணங்கள், பாடசாலை மாணவர்களின் பாடநூல்கள், கால்நடைகள் என அனைத்தும் வெள்ள நீரினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இம் மழை காரணமாக, அப் பகுதியில் உள்ள மக்களின் பயிரிடப்பட்ட வீட்டு தோட்டங்கள் அனைத்தும் வெள்ளத்தினால் அடித்து செல்லப்பட்டுள்ளன.

குறிப்பாக அங்கு உள்ள தோட்ட தொழிலாளர்கள் தொடர்ந்து வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்றனர் என்றும், இவ்வாறான நேரங்களில் தம்மை யாரும் கண்டு கொள்வதில்லை என்றும், அரசியல்வாதிகள் வாக்கு வாங்குவதற்கு மட்டுமே தம்மை தேடி வருகின்றனர் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.



# கிரிக்கெட் இடைக்காலக் குழுவுக்கு எதிரான மனுவின் விசாரணை நாளை புதன்கிழமைக்கு

ஸ்ரீலங்கா கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக்குழுவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மனு சோபித்த ராஜகருணா மற்றும் டீ.என் சமரக்கோன் ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று ஆராயப்பட்டது.

இதன்போது இந்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் புதன்கிழமை வரை ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# பொருளாதார வீழ்ச்சியின் சூத்திரதாரிகளை உயர்நீதிமன்றமே அம்பலப்படுத்தி விட்டது!

## அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்கிறார் மைத்திரி

"பொருளாதாரப் பாதிப்புக்கு யார் பொறுப்புக் கூற வேண்டும் என்பதை உயர்நீதிமன்றம் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தியுள்ளது. நீதிமன்றத்துக்கு எமது கௌரவத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். தீர்ப்பு வழங்கிய நீதியரசர்களை நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அழைத்து விசாரணை செய்ய எவருக்கும் தகைமை இல்லை.நாடாளுமன்றத் தெரிவுக்குழு தோல்வியடைந்துள்ளது. ஆகவே உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சிக்காமல் ஏற்றுக்கொள்ளுங்கள்"- என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

பொருளாதாரப் பாதிப்புக்கு யார் காரணம் என்று இதுவரை காலமும் பேசப்பட்ட விடயத்துக்கு உயர்நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை தற்போது வழங்கியுள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எமது கௌரவத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் ஆளும் தரப்பினர் மாறுப்பட்ட கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள். நாடாளுமன்ற தெரிவுக்குழு ஊடாக இந்த வழக்கு விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவும், நீதியரசர்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்து விசாரணை செய்ய வும் பேசுகிறார்கள்.

நீதியரசர்களை விசாரணைக்குட்படுத்தும் தகைமை இங்கு எவருக்கும் கிடையாது. நாடாளுமன்றத் தெரிவு குழுக்கள் தோல்வி என்பதற்கு பல விடயங்கள் சான்றாக உள்ளன.

நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சித்துக் கொண்டிருக்காமல் உரிய தரப்பினர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். நீதியரசர்களை விசாரணைக்குட்படுத்தினால் நாட்டு மக்கள் நாடாளுமன்றத்தை கடுமையாக விமர்சிப்பார்கள். மிகுதியாக இருக்கும் கௌரவமும் இல்லாமல் போகும்.

பொருளாதார மீட்சிக்காக நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த சிறந்த திட்டங்கள் 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் இடைநிறுத்தப்பட்டன. அதன் சாபத்தையே இன்று அவர்கள் அனுபவிக்கிறார்கள்.

பொருளாதாரப் பாதிப்பினால் சமூக கட்டமைப்பில் போதைப்பொருள் வியாபாரம். விபச்சாரம் போன்ற சமூக விரோத செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. இது சிறந்தொரு நிலையல்ல.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிரித்தானியாவின் சனல் -04 நிறுவனம் வெளியிட்ட காணொலிகள் வெறும் திரைப்படமாக்கப்பட்டுள்ளன.

சனல்-4 வெளியிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. நாட்டு மக்கள் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். - என்றார்.



# மாதம்பையில் நேற்று விபத்தினால் பதற்றம்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - மாதம்பை பிரதேசத்தில் நேற்று பாடசாலை மாணவர் உட்பட மூவரை மோதி விபத்துக்குள்ளாக்கி விட்டுத் தப்பிச் செல்ல முற்பட்டதாகக் கூறப்படும் தனியார் பயணிகள் பஸ் மீது பிரதேசவாசிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த பாடசாலை மாணவர் உட்பட மூவரும் சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் மாதம்பை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இந்தத் தனியார் பஸ் மாதம்பை பழைய நகரில் மற்றுமொரு பஸ்ஸை முந்திச் செல்ல முட்பட்ட போது 3 மோட்டார் சைக்கிள்களுடன் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துக் காரணமாக மாதம்பை பகுதியில் நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றுகூடியதில் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

இதனால், சிலாபம்-கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டது.

எனினும், இந்த அமைதியின்மை நிலைமையை கட்டுப்படுத்த மாதம்பை பொலிஸாருக்கு மேலதிகமாக, சிலாபம் மற்றும் தொடுவாவ பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

இந்த விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி மற்றும் நடத்துனர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மாதம்பை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் சாகல ரத்நாயக்கவுடன் கலந்துரையாடல்



ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் இடம்பெற்றுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நீர் வழங்கல் துறையின் புதிய மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கொள்கைத் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக் கட்டமைப்பு பற்றி இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.











# சுயவிருப்பில் அரச ஊழியர்கள் ஓய்வு பெற வசதியாகத் திட்டம்

55 வயது நிறைவடைந்துள்ள மற்றும் 20 வருட அரச சேவையிலுள்ள அரசாங்க ஊழியர் சுயவிருப்பத்தின் பேரில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் முறைமையொன்றை தயாரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான முறைமையொன்றை தயாரிப்பதற்காக அரச சேவை இணைப்பு செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள குழு அறிக்கையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் செயலாளர் அநுர திசாநாயக்கவின் தலைமையிலான 06 பேர் கொண்ட இக்குழுவின் அறிக்கை மூலம், அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஊழியர்களை நியமிப்பதற்காக இது வரை நடைமுறைப்படுத்தியிருந்த முறைமை ஒழிக்கப்படவுள்ளது.

இதற்குப்பதிலாகஅமைச்சின்கீழுள்ள அதிகாரிகள் சம்பந்தப்பட்ட திட்டத்துடன் இணைந்ததான வெற்றிடங்களை நியமிப்பது தொடர்பில் புதிய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களுக்காக விசேட நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள அதிகாரிகளை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன.

நிறுவனம் ஒன்றுக்காக ஓர்அதிகாரியை மாத்திரம் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்வதற்கு அந்தக் குழுவில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது, தாம் நிரந்தரமாக வசிக்கும் பிரதேசத்துக்கு இடமாற்றம் பெறுவதற்கான முன்னுரிமையை வழங்குவதற்கும் அந்தக்குழு யோசனை முன்வைத்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 21.11.2023




இன்று மொத்தத்தில் சிறப்பான நாளாக இருக்கும். உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். இன்று நண்பர்களுடன் தொடர்பு கொள்வீர்கள். புதிய நண்பர்களைப் பெறுவீர்கள்.

உங்களின் திடமான முயற்சி மூலம் இன்று உங்கள் பணியில் நல்ல பலன்கள் காண்பீர்கள்.

இன்று உங்கள் அன்பை உங்கள் துணையிடம் தடையின்றி வெளிப்படுத்துவீர்கள். இருவரும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நீங்கள் கணிசமான தொகை சம்பாதிக்க விரும்புவீர்கள். இதனை உண்மையாக உங்களால் முடியும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பெற்று மகிழ்வீர்கள். உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் காண்பீர்கள். உங்கள் வாழ்வில் நன்மை தரும் மாற்றங்கள் நிகழும். நீங்கள் உங்கள் வலிமையை உணர்வீர்கள். இதனால் வெற்றி பெறுவீர்கள்.

இன்று உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ள இயலும். உங்கள் பணிகளை முடிப்பதற்கு அதிக முயற்சி எடுப்பீர்கள்.

இன்று காதலில் மகிழ்ச்சி கொள்வீர்கள். உங்கள் இனிமையான உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் பணிக்கு பாராட்டும் அங்கீகாரமும் பெறுவீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் கவலைப் படும் வகையில் சில குழப்பங்கள் எதிர் கொள்ள நேரும் என்றாலும் இன்று சராசரியை விட சற்று சிறப்பாக காணப்படும் நாள். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் வெற்றி காணும் நாள்.

இன்று பணிச்சுமை காணப்படும். பணியில் தாமதங்களை தவிர்க்க நீங்கள் திட்டமிட்டு கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

இன்று காதலுக்கு சிறப்பான நாள். உங்கள் துணையின் விருப்பத்தை நீங்கள் பூர்த்தி செய்வீர்கள்.

நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் தொண்டு மற்றும் ஆன்மீக காரியங்களுக்கு நன்கொடை அளிப்பீர்கள். இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதிகப் பணிகள் காரணமாக சில சமயங்களில் நீங்கள் பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை வெளிபடுத்துவீர்கள்.




இன்று சற்று மந்தமான நாள். நீங்கள் தன்னம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். தன்னம்பிக்கை உருவாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது. பணியில் தவறுகள் நேராமல் இருக்க திட்டமிட்டு அதன் படி செயலாற்ற வேண்டும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று பண இழப்பிற்கு வாய்ப்பு உள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தொடை மற்றும் கால் வலியால் பாதிக்கப்படுவீர்கள். யோகா மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கிய மாக இருக்கலாம்.




இன்று சாதகமான நாளாக இருக்கும். நீங்கள் உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். புதிய நண்பர்களைப் பெறுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக பணியிடத்தில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

உங்கள் உடன் பிறந்தவர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் காதலை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த இது உகந்த நாள் அல்ல.

நிதி வளர்ச்சி இன்று மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். உங்கள் வங்கி யிருப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் தைரியமாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் ஏற்ற இறக்கங்களை சந்திப்பீர்கள். ஆனால் இன்று விரைந்து முடிவு எடுப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் செயல்படுவீர்கள். இயலாததைக் கூட சாத்தியமாக்கும் ஆற்றல் உங்களிடம்

இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் பொறுப்புகளை முடிக்கும் வகையில் நீங்கள் பணியாற்ற வேண்டும்.

உங்கள் தாயுடன் மோதல்கள் ஏற்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். பண வரவிற்கான வாய்ப்புகள் குறைவு. உங்கள் பணத்தை கவன மாகக் கையாள வேண்டும்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் பெரிய குறைபாடு ஏதும் இருக்காது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் செயல்களை திட்டமிட்டு மேற்கொள்வீர்கள். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் அனுகூலமாக இருக்கும். பணியில் வெற்றி காண்பதற்கான மன உறுதி உங்களிடம் காணப்படும்.

நீங்கள் காதலின் இன்பத்தை ரசிப்பீர்கள். உங்கள் உறவு நல்லுறவாக இருக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் கையிருப்பு பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும்.

5உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு சற்று கவலை அளிக்கும்.




இன்று அனுகூலமான நாளாக இருக்காது. உங்கள் அணுகுமுறையில் உறுதி தேவை.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. அதிகப் பணிகள் காணப்படும். அது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்ற வேண்டும்.

உங்கள் தாயுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி அனுகூலமாக இருக்காது. நீங்கள் ஒவ்வொரு ரூபாயையும் கவனமாக செலவு செய்ய வேண்டும்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.11.2023




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். எல்லா செயல்களையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் ஆற்றலை உணர்ந்து கொள்வீர்கள்.

பணியிடத்தில் அனைத்தும் சிறப்பாக நடக்கும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். எல்லா விதத்திலும் நன்மை காணப்படும்.

இன்று காதல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

உங்களிடம் இருக்கும் பணம் போதுமானதாக இருக்கும். உங்கள் சேமிப்பு கூடுவதற்கான வாய்ப்பு காணப்படும்.

இன்று திடமாக ஆரோக்கியமாக இருப்பீர்கள். மகிழ்ச்சியின் காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் தொடர்பாடல் திறமை மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். நீங்கள் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அது உங்கள் தன்னம்பிக்கையை வளர்க்கும்.

உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சேமிப்பை சிறப்பாக பராமரிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று தேவையான முயற்சிகள் செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். தேவையற்ற கவலைகள் உங்கள் வளர்ச்சியை பாதிக்கும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. அதனை தவிர்க்க வேண்டும்.

வீட்டில் பெரியவர்களுடன் குறிப்பாக தந்தையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இன்று காதல் விவகாரங்களுக்கு உகந்த நாள் அல்ல.

நிதிநிலைமை ஏற்றத்தாழ்வுடன் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்புள்ளதால் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்கான செலவு காணப்படும். இது உங்களுக்கு சற்று கவலை அளிக்கும்.




இன்று சற்று மந்தமான நாள். சவால்களை எதிர்கொள்ள தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். உற்சாகமாக இருப்பது நல்லது.

பணியிடத்தில் வளர்ச்சி சிறப்பாக இருக்காது. கூடுதல் சுமை காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். நீங்கள் கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையிடம் குறைந்த அளவு புரிந்துணர்வே பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் தாயின் உடல் நலத்திற்காக நீங்கள் கூடுதல் பணம் செலவு செய்ய நேரலாம்.







# சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஜனாதிபதி ரணிலை சந்தித்துப் பேச்சு





சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதிக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இரு நாடுகளுக்கிடையிலான சுற்றுலா, வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியும் அரச உறுப்பினருமான சேன் யிங்க் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் உட்பட இலங்கைக்கு சீனா வழங்கும் ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி, அதற்காக சீன ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவித்தார்.

அத்துடன், சுற்றுலா, விளையாட்டு, விவசாயம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதே இலங்கையின் எதிர்பார்ப்பு எனவும், அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் துறைமுக நகரம் என்பன இன்று முதலீட்டுக்குத் தயாராக இருக்கின்றன என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொருளாதார ரீதியில் அதிக பங்களிப்பை வழங்கக் கூடிய "பெல்ட் என்ட் ரோட்" திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்குப் பிரவேசிப்பதற்கு அதன் பங்காளரான இலங்கை போன்ற நாடுகள் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்

பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்திற்குள் பிரவேசிக்க இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி விளக்கினார்.

இந்துசமுத்திரம், கடற்பயணத்திற்கான சுதந்திர வலயமாக இருக்க வேண்டும் எனவும் புவிசார் அதிகாரப் போட்டியின்றி அமைதியான வலயமாக பேண இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

சீனா – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மிக விரைவில் நடைமுறைப்படுத்தவும் இரு தரப்பும் உடன்பாடு தெரிவித்தன.

இலங்கைக்கு சீனாவின் தொடர்ச்சியான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய ஷென் யிங்க், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் தினுக் கொலம்பகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.




# பாடசாலைகளுக்கான தேசிய மட்ட கிரிக்கெட் சம்பியனானது வாதுவ மத்திய கல்லூரி அணி

( அஸ்ஹர்இப்றாஹிம்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கடினபந்து கிரிக்கெட் தொடரின் 19 வயதுப் பிரிவில் வாதுவ மத்திய கல்லூரி 5 விக்கட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் வாதுவ மத்திய கல்லூரி அணியும் மினுவாங்கொட நாலாந்தா ஆண்கள் கல்லூரி அணியும் மோதின.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மினுவாங்கொட நாலாந்தா ஆண்கள் கல்லூரி அணி, 35 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வாதுவ மத்திய கல்லூரி அணி 22.2 ஓவர்களில் 5 விக்கட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களைச் சேர்த்தது. இதன்மூலம் அந்த அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் வாதுவ மத்திய கல்லூரி மாணவன் டிஸான் மனுசங்க ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களைப் பெற்றார்.



# பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் சீனாவின் தூதுக் குழுவினர் சந்திப்பு





இலங்கையின் தற்போதைய பொருளாதாரம், அரசியல் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஷென் யிகின் உள்ளிட்ட தூதுக்குழுவினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாட்டுக்கு வருகை தந்துள்ள சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் விசேட பிரதிநிதி ஷென் யிகின் உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்று அலரி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்திருந்த சந்தர்ப்பத்தில் பொருளாதாரத்தை மீட்டெடுக்க சீனா வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, எதிர்காலத்திலும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சீனா உதவும் என நம்புகிறோம் என்று குறிப்பிட்டார்.

மேலும் பொது மற்றும் தனியார் முதலீடுகள், உற்பத்தி பொருள்களின் ஏற்றுமதிக்கு, புதுப்பிக்கதக்க ஆற்றல், தகவல் தொழில்நுட்பம், கல்வி, உட்கட்டமைப்பு வசதிகள், பொருளாதார பிரச்சினைகளுக்கு நீண்டகால தீர்வுகளை வழங்குவதற்கான சீனாவின் ஆதரவு இலங்கைக்கு மட்டுமல்லாமல் மற்ற நாடுகளுக்கும் நம்பிக்கை அளித்துள்ளதாகத் தெரிவித்த பிரதமர், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு சீனா ஆதரவு வழங்கியமையை இதன்போது நினைவுகூர்ந்தார்.

இதற்கு பதிலளித்த விசேட பிரதிநிதி ஷென் யிகின், சீனா இலங்கையைநீண்டகாலநட்புநாடாகவேகருதுகிறது, ஒத்துழைப்புகளை விரிவுபடுத்தவும், புதிய திட்டங்களில் முதலீடு செய்யவும், கொழும்பு துறைமுக நகரம், ஹம்பாந்தோட்டை துறைமுகம், வறுமை ஒழிப்பு வேலைத்திட்டம், கல்வி மற்றும் விவசாயம் என்பற்றை விரிவாக்கம் செய்யவும் எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையின் முன்னேற்றத்தை கண்டு சீனா மகிழ்ச்சியடைகின்றது எனவும், நெருக்கடிகளிலிருந்து மீண்டெழ இலங்கை முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு சீனாவின் தொடர்ச்சியான ஆதரவு எப்போதும் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் சுதந்திரம், சுயாதீன தன்மை மற்றும் இறையாண்மையைப் பேணிச் செல்ல தொடர்ந்தும் சீனா துணை நிற்கும் எனவும் உறுதியளித்தார்.

மேலும் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் காணப்படும் நீண்டகால உறவை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் அதை கட்டியெழுப்ப சீனா உதவும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.